1992 ஏப்ரல் 24]

திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இந்த கிராமம் மிகச் சிறிய கிராமம் ஆகும். இந்த கிராமத்தில் பின்தங்கிய மக்கள் மிக அதிகமாக வசித்து வருகிறார்கள். அதனால் இது அடுத்த ஆண்டிலாவது அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராமத்திற்கு அரை கிலோ மீட்டர் தூரத்திலேயே ஒரு குழந்தைகள் நல மையம் இருக்கிறது. ஒரு பள்ளி மையமும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, பின்தங்கிய மக்களாக இருந்தாலும் அங்கே எவ்வளவு குழந்தைகள் இருக்கிறார்கள் என்ற அடிப்படையில் தான் அந்த மையம் செயல்படுவதற்கு, புதிய மையத்தை தொடங்குவதற்கு முடியும். அந்த அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர் அதைப்பற்றி எடுத்துக் கொடுப்பார் என்று சொன்னால் பின்னர் அது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 622. திரு. எஸ். ஆசைமணி. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

622—

கால்நடை மருந்தகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல்.

*1555—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

தஞ்சாவூர் மாவட்டம், ஏனங்குடியில் இயங்கிவரும் கால்நடை மருந்தகத்திற்கு ஆதிதிராவிடர் காலனிக்கு அருகில் உள்ள இடத்தில் சொந்தக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 15 ஆண்டுகாலமாக வாடகைக் கட்டிடத்தில் பஞ்சாயத்து அலுவலகத்தில் இயங்கி வருகிற இந்த கால்நடை மருந்தகத்திற்கு அங்கே இடம் இருக்கிற காரணத்தால் ஸ்பெஷல் காம்போனன்ட் ஸ்கீமில், ஆதிதிராவிடர் நலத்துறையின்கீழ் கட்டிடம் கட்டி கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏனங்குடி கிராமத்திற்கு கால்நடை மருந்தக கட்டிடம் கட்டுவது பற்றி அரசுக்கு தீர்மானம் ஒன்றியத்தின் மூலமாக வரப்பெற்றால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் மூன்றாண்டுகளுக்கு முன்னால் திருமருகல் ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக தீர்மானம் போட்டு அது அரசுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக அறிகிறேன். எனவே, அந்தத் தீர்மானத்தை வாங்கி சிறப்புத் திட்டத்தின் கீழ் கட்டித் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மருந்தகம் கட்டுவதற்கு ஒரு ஏக்கர் நிலம் இனாமாக தரவேண்டும். அதைப் போல மருந்தகம் கட்டுவதற்கு தொகையை ஊராட்சி ஒன்றியம் ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதுபோன்ற கண்டிஷன்கள் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு கோப்புகள் இன்னும் வரவில்லை. வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 623. டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

623—

ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டுதல்.

*1653—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

இராமநாதபுரம் மாவட்டம், சத்திரக்குடியில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

இராமநாதபுரம் மாவட்டம், சத்திரக்குடியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்ட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. நிதி நிலைக்கேற்ப எதிர் வரும் ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்திரக்குடியில் வாடகை கட்டிடம் கிடைக்காததால் சத்திரக்குடியிலிருந்து மூன்று கிலோ மீட்டர்